# துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை. அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான். நாகூம் 1 : 15

**சாத்தானின் அதிகாரமெல்லாம்,**
**என் இயேசு பறித்துக் கொண்டார்.**
**சிலுவையில் அறைந்து விட்டார்**
**காலாலே மிதித்து விட்டார்–இயேசு.**

**கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு, எப்போதும் வெற்றி உண்டு வெற்றி, வெற்றி, வெற்றி, வெற்றி அல்லேலூயா**

எனக்கு இவ்வளவு பொருள் நஷ்டப்படுத்தி விட்டான். ஆதலால் துஷ்டன் பொருளை எடுத்துக் கொள்வேன் என்று சொல்லும் சகோதரியே, இவ்வளவு நாட்களும்.

**துஷ்டர் கையில் மடிகிறதுபோல மடிந்தாயே.** 2சாமு 13:34 ஆனாலும் **எண்ணாகமம் 16:26** சொல்கிறபடி

இந்தத் துஷ்டமனிதரின் சகல பாவங்களிலும், நீங்கள் வாரிக் கொள்ளாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களை விட்டு விலகி, அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள்.

**சங்கீதக்காரன் 17:4ல் சொல்கிறார்**

துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னை காத்துக் கொள்கிறேன் – என்பதாக.

**ஏனெனில், நீதி 17:11 சொல்கிறது.**

துஷ்டன் கலகத்தையே தேடுகிறான்–என்பதாக.

**ஆனாலும், எரேமியா 12:14ல் கர்த்தர் சொல்கிறார்.**

இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த, என் சுதந்திரத்தைத் தொடுகிற துஷ்டரான அயலார் அனைவரையும் தங்கள் தேசத்தில் இராதபடிக்குப் பிடுங்கிப் போடுவேன் என்பதாக.

**ஆதலால் நீதி. 3:25படி**

சடிதியான திகிலும், துஷ்டர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது, நீ அஞ்ச வேண்டாம்.

**துஷ்டரைக் குறித்து ஏசாயா 58:4 சொல்கிறது.**

இதோ வழக்குக்கும், வாதுக்கும், துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்''–என்பதாக.

**ஆதலால், நீங்கள் ஜெபிக்க வேண்டிய விதமாவது**

என் ஆத்துமாவைப் பட்டயத்திற்கும், எனக்கு அருமையானதை நாய்களின் துஷ்டத்தனத்திற்கும் தப்புவியும்–என்பதாக

**மாற்கு 7 : 22 சொல்கிறது.**

ஏனெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து, துஷ்டத்தனங்கள்–புறப்பட்டு வருகிறது.
என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**துஷ்டன் இனி உன் வழியாய் கடந்து வருவதில்லை.**
**அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.**

ஆகஸ்ட் மாதம் கீழ்க்கண்டவாறு அடிக்கடி சொல்லுங்கள்

**துஷ்டன் இனி என் வழியாய் கடந்து வருவதில்லை.**
**அவன் முழுவதும் சங்கரிக்கப்பட்டான்.–ஆமென்.**
**மேலும் விசுவாசத்தோடே பாடுங்கள்**

என்னென்ன துன்பம் வந்தாலும்,
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும், (2)
நான் சோர்ந்து போக மாட்டேன் (2)
தீ நடுவே நடந்தாலும் நான் எரிந்து போக மாட்டேன்
ஆறுகளைக் கடந்தாலும், நான் மூழ்கிப் போக மாட்டேன்

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு எப்போதும் வெற்றி, உண்டு. வெற்றி, வெற்றி, வெற்றி, வெற்றி, அல்லேலூயா.